**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8066927

1. District மாவட்டம் : Thiruvallur PS காவல்நிலையம் : Vigilance & Anti Corruption Thiruvallur Year ஆண்டு : FIR No. மு.த.அ. எண் : 03/19 Date நாள் : 30-07-2019

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 (Amendment Act 2018) Sections பிரிவுகள்: 7
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் : 27-05-2019, 04-07-2019 and 29-7-19 Date to நாள் வரை :
Time Period நேர அளவு : Time from நேரம் முதல் : Time to நேரம் வரை :
(b) Information Received at PS. Date காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : 30-07-2019 Time நேரம் : 13.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் : 30-07-2019 Time நேரம் : 16.00 hrs

Seen
[signature]
31/7/19

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Hand written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் West - about 65 km

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி O/o The Tasildhar R.K.pet Taluk Thiruvallur District

Seen
[signature]
31/7/19

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. A. Rajesh (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr. Arumugam
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 30/19 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Driver in Private School Bus (g) Address : முகவரி No. 5/1832 Vinayagar koil Street Sreekrishnapuram R.K.pet Taluk Thiruvallur District

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Saravanan
Firka Survayor, R.K pet Taluk office Thiruvallur District

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Nil

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு Nil

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் Nil

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheets attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed C. JAYASREE Rank INSPECTOR OF POLICE to take up the investigation / Refused Investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

A. [signature] 31/7/19 [signature] 30/7/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 31.7.19
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் C. JAYASREE
Rank: நிலை INSPECTOR OF POLICE No. எண்
VEAC Thiruvallur

**(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.3/AC/2019/TLR U/s 7 of Prevention of Corruption Act - 1988. (Amendment Act-2018))**

பணிந்து அனுப்பப்பட்டது.

கடந்த, 30.07.2019-ம் தேதி 13.00 மணியளவில், நான் திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது, ஆ.ராஜேஷ், த/பெ.ஆறுமுகம், எண்.5/1832, விநாயகர் கோயில் தெரு, ஸ்ரீ கிருஷ்ணாபுரம், ஆர்.கே.பேட்டை தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் விவரம் அனுப்புனர், ஆ.ராஜேஷ், த/பெ.ஆறுமுகம், எண்.5/1832, விநாயகர் கோயில் தெரு, ஸ்ரீ கிருஷ்ணாபுரம், ஆர்.கே.பேட்டை தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம், பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவள்ளூர், ஐயா, நான் மேற்கண்ட முகவரியில் என் குடும்பத்துடன் வசித்துவருகிறேன். நான் ஆர்.கே.பேட்டையில் உள்ள தனியார் பள்ளியில் பேருந்து ஓட்டுனராகவும் மின் பழுதுபார்பவராகவும் வேலைசெய்துவருகிறேன். நான் 2018ஆம் வருடம் எனது கிராமத்தின் அருகே உள்ள சந்தானவேணுகோபாலபுரம் கிராமத்தில் சர்வே எண்.157/8C2-ல் அமைந்துள்ள வீட்டுமனைப்பரிவில் மனை எண் 71-ஐ கிரையம் பெற்று கடந்த 28.11.2018 ஆம் தேதி ஆர்.கே.பேட்டை சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.2532/2018 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி இடத்திற்கு எனது பெயரில் உட்பிரிவு செய்து பட்டா பெயர் மாற்றம் செய்ய வேண்டி கடந்த 26.04.2019 அன்று இணையம் மூலமாக பள்ளிப்பட்டு தாலுக்கா அலுவலகத்தில் மனு செய்தேன். தற்போது தமிழக அரசு பள்ளிப்பட்டு தாலுக்காவினை இரண்டாக பிரித்ததின் காரணமாக பள்ளிப்பட்டு தாலுக்காவில் இருந்த ஆர்.கே.பேட்டை தற்போது தனி தாலுக்காவாக செயல்பட்டு வருகிறது. அதற்கான அலுவலகம் ஆர்.கே.பேட்டை, வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. அதனை அறிந்து கடந்த 27.05.2019 அன்று காலை சுமார் 11.30 மணியளவில் எனது பட்டா மாறுதல் மனு சம்மந்தமாக ஆர்.கே.பேட்டை தாலுக்கா அலுவலகத்திற்கு சென்று விசாரித்ததில் அங்கு இருந்தவர்கள் உட்பிரிவு செய்யவேண்டிய பட்டாவென்றால் சர்வேயர் சரவணன் என்பவரை சந்திக்குமாறு கூறினார்கள். பின்னர் அலுவலகத்தில் இருந்த சர்வேயர் சரவணன் அவர்களை சந்தித்து என்னுடைய மனுவின் நிலை குறித்து கேட்டபோது, அவர் ரூபாய் 3,000/- லஞ்சமாக கொடுத்தால்தான் மேற்படி கோப்பினை உரிய நடவடிக்கை எடுத்து பட்டா வாங்கி தருவேன் எனக்கூறி அனுப்பிவிட்டார். நான் ஆன்லைன் மூலம் எனது மனுவின் நிலை குறித்து பார்த்தபோது சர்வேயரிடம் நிலுவையில் உள்ளது தெரியவந்தது. பின்னர் கடந்த 04.07.2019 அன்று மாலை சுமார் 04.00 மணியளவில் சர்வேயர் திரு.சரவணன் அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து எனது மனுவின் நிலை குறித்து கேட்டபோது அவர் என்னிடம் "நான் ஏற்கனவே லஞ்சமாக கேட்ட ரூ.3,000/- கொண்டுவந்தாயா?" எனக்கேட்டார். அதற்கு நான் எனது குடும்ப சூழ்நிலையையும் எனது இயலாமையையும் எடுத்துக்கூறியபோது அவர் ரூ.500/- குறைத்துக்கொண்டு ரூ.2,500/- லஞ்சமாக கொடுத்தால்தான் எனது மனுவை மேல்நடவடிக்கைக்காக வட்டாச்சியர் அவர்களுக்கு அனுப்புவேன் என கறாராக கூறி அனுப்பிவிட்டார். நான் வேலையின் காரணமாகவும் பணம் புரட்டமுடியாத காரணத்தினாலும் அவரை சந்தித்து எனது மனுவினை குறித்து கேட்கமுடியவில்லை. கடந்த 27.07.2019 அன்று ஆன்லைன் மூலம் என்னுடைய மனுவின் நிலை குறித்து பார்த்ததில் இன்னும் சர்வேயர் சரவணன் அவர்களிடமே நிலுவையில் இருப்பதாக தெரிந்தது.. எனவே நான் 29.07.2019 ஆம் தேதி மதியம் சுமார் 12.30 மணியளவில் சர்வேயர் திரு.சரவணன் அவர்களை,

அவருடைய அலுவலகத்தில் சந்தித்து எனது மனு குறித்து கேட்டபோது அவர் எனது கோப்பினை தயார் செய்துகொண்டிருப்பதாகவும், முடிந்தவுடன் என்னை போனில் தொடர்பு கொண்டு தெரிவிப்பதாகவும் கூறி அனுப்பிவிட்டார். பின்னர் மதியம் சுமார் 02.30 மணிக்கு எனது போனில் தொடர்பு கொண்டு நீ இன்றைக்கு வரவேண்டாம், இங்கே ஆட்கள் இருக்கிறார்கள். அதனால் நான் வரும் 31.07.2019 ம் தேதி சுமார் 11.00 மணிக்கு உங்கள் ஊருக்கு வேறு ஒருவர் இடத்தை அளக்க வருகிறேன். அப்போது லஞ்சப்பணத்தை பெற்றுக்கொள்கிறேன் எனக்கூறினார். அவர் என்னிடம் லஞ்சப்பணம் பெறும் நோக்கோடு என் மனுவின் மீது உரிய நடவடிக்கை எடுக்காமல் காலம் தாழ்த்தி வந்துள்ளார் என எனக்கு தெரியவருகிறது. ஆர்.கே.பேட்டை தாலுக்கா அலுவலக சர்வேயர் சரவணன் அவர்களுக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லாததால் இப்புகார் மனுவை அளிக்கிறேன். எனவே அவர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். தாங்கள் எடுக்கும் சட்டப்படியான நடவடிக்கைக்கு தக்க ஒத்துழைப்பு அளிக்கிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம் A. Rajesh) 30.7.2019.

Honoured Sir,

I received the above complaint on 30.07.2019 at 13.00 hrs and after getting proper permission from DVAC on this complaint, a Preliminary Enquiry was conducted in a discreet manner. Based on the outcome of the Preliminary Enquiry, enmity, genuineness of the complaint and the reputation of the accused are verified. Since, there is prima-facie made out to register FIR on said complaint against the accused Tr.Saravanan, Firka Surveyor, Taluk Office, R.K.Pet Taluk, Thiruvallur District. Hence, I registered a case in Thiruvallur V&AC, Cr.No.3/AC/2019/TLR u/s 7 of The Prevention of Corruption Act-1988 (Amendment Act-2018) at about 16.00 hrs on today 30.07.2019 and took-up action.

30/7/19

**INSPECTOR OF POLICE**
**VIGILANCE & ANTI CORRUPTION**
**Thiruvallur - 602 001.**